2026 – பிப்ரவரி மாதம் 19–ஆம் தேதி வியாழக்கிழமை.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 112/2023*

*2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19–ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. K. மனோரஞ்சிதம் ,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW 1, மகாலிங்கம் |
| தந்தையார் பெயர் | : | ஆறுமுகம் |
| ஊர் | : | சனமங்களம் |
| வட்டம் | : | மண்ணச்சநல்லூர் |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 56 |

தேதி: 19.02.2026

முதல் விசாரணை:–

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். நான் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

மேற்படி வழக்கு விபத்தில் சுமார் 15 நபர்கள் காயம் அடைந்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. சுமார் 6,7 நபர்கள்தான் காயம் அடைந்திருப்பார்கள். மேற்படி வழக்கு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் சுமார் 15 நபர்கள் காயம் அடைந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் நான் உண்மையை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் எங்கள் பேருந்தில்தான் விபத்து சமயத்தில் பயணம் செய்தார் என்றும்

எனவே அவருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக எங்கள் நிறுவனம்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:- இல்லை.</u>**

**ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**